**செய்தி வெளியீடு எண்: 939** **நாள்: 19.12.2018**

**<u>செய்தி வெளியீடு</u>**

இன்று (19.12.2018) காலை 11 மணியளவில் மாநில நுகர்வோர் பாதுகாப்புக் குழுவின் ஆலோசனைக் கூட்டம் சென்னை, குடிநீர் வழங்கல் அலுவலகக் கூட்டரங்கில் **மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. இரா. காமராஜ் அவர்கள்,** தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அரசு செயலர்கள், மத்திய, மாநில அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் உயர் அலுவலர்கள், இக்குழுவில் இடம் பெற்றுள்ள சட்டமன்ற உறுப்பினர்கள், தன்னார்வ நுகர்வோர் அமைப்புகள், வணிகர் சங்கங்களின் பிரதிநிதிகள், மாவட்டங்களில் செயல்படும் பல்வேறு நுகர்வோர் பாதுகாப்பு சங்கங்கள் மற்றும் குழுக்கள் ஆகியவற்றின் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

அரசின் கொள்கை முடிவுகளை நடைமுறைப்படுத்தி, நுகர்வோர் நலனுக்கு ஏற்றார்போல் அவ்வப்போது தேவைப்படும் மாற்றங்கள் செய்ய அரசுக்கு பரிந்துரை செய்யவும், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், நுகர்வோர் பாதுகாப்பு குழுக்கள் ஆகியவற்றை ஒருங்கிணைத்து, மாநில நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ், நுகர்வோர் அனைவருக்கும் உரிய விலையில் தரமான பொருள்கள் கிடைக்கவும், சிறந்த முறையில் சேவைகள் வழங்குவதையும், நேர்மையற்ற வணிக முறைகளிலிருந்து நுகர்வோரைப் பாதுகாக்கும் அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க அரசு உறுதி பூண்டுள்ளது என மாநில நுகர்வோர் பாதுகாப்புக் குழுவின் தலைவராகப் பொறுப்பேற்றுள்ள மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை அமைச்சர் தெரிவித்தார்.

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின்படி, நுகர்வோர் நிவாரணம் பெறும் அமைப்புகள் மூன்று அடுக்குகளாக அமைக்கப்பட்டுள்ளன. ரூபாய் 20 இலட்சம் வரை நிவாரணம் கோரும் வழக்குகள் மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்களிலும், ரூபாய் 20 இலட்சத்திற்கு மேல் ஒரு கோடி வரையிலான வழக்குகள் மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் வாயிலாகவும், ரூபாய் ஒரு கோடிக்கு மேல் தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் மூலமாகவும் தீர்வு

காணப்பட்டு வருகின்றன. நுகர்வோரின் உரிமைகளையும், கடமைகளையும் உரிய விழிப்புணர்வு ஏற்படுத்துவதன் மூலம் நிலைநிறுத்திட இயலும்.

தமிழ்நாட்டில் ஒரு கோடியே 87 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதந்தோறும் 3 இலட்சத்து 15 ஆயிரம் மெ.டன் அரிசியும் மற்றும் கோதுமை விலையில்லாமலும், மானிய விலையில் சர்க்கரை, துவரம் பருப்பு மற்றும் பாமாயில் ஆகியன வழங்கி இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாகத் திகழ்வது மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படும் அரசு என மாண்புமிகு அமைச்சர் தெரிவித்தார். குடும்ப அட்டைதாரர்கள் பொது விநியோக திட்டப் பொருட்களை பெறுவதில் வெளிப்படைத் தன்மையை உருவாக்கவும், போலி குடும்ப அட்டைகளை களைந்து உரியவர்களுக்கே பொருட்கள் சென்றடைவதை உறுதி செய்யவும், ஸ்மார்ட் கார்டு வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, இதுவரை, 1 கோடியே 99 இலட்சம் ஸ்மார்ட் கார்டுகள் அச்சிட்டு வழங்கப்பட்டுள்ளன. இத்துறையின் மூலம் ஒவ்வொரு மாதமும் இரண்டாம் சனிக்கிழமையன்று நடத்தப்படும் குறைதீர் முகாம்களில் கடந்த 8 ஆண்டுகளில் 7 இலட்சத்து 61 ஆயிரம் மனுக்கள் பெறப்பட்டு, 7 இலட்சத்து 39 ஆயிரம் மனுக்கள் மீது அன்றைய தினமே தீர்வு காணப்பட்டுள்ளது. நுகர்வோர் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்கு **“மாநில நுகர்வோர் உதவி மையம்”** உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, ஆணையாளர் அலுவலகத்தில் இயங்கி வருகிறது. **(044–28592828)** தமிழ்நாட்டில் நுகர்வோர் நலனைப் பாதுகாக்க துறை அலுவலர்களும், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அமைப்புகளும் ஒன்று சேர்ந்து பாடுபட வேண்டுமென அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

முன்னதாக கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மைச் செயலாளர் திரு. தயானந்த் கட்டாரியா, இ.ஆ.ப., கூட்டத்திற்கு வந்திருந்த அனைவரையும் வரவேற்றார். உணவுப்பொருள் வழங்கல் துறை ஆணையாளர் திருமதி. சோ. மதுமதி, இ.ஆ.ப., நன்றி கூறினார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**